

பீட்டர் மாமா

தலைமையிடம் நெருக்கம் காட்டும் மாஜி அமைச்சர்களால் அப்செட்டில் இருக்கும் நடிகர் கட்சி நிர்வாகிகள் பற்றி சொல்கிறார்

wikiயானந்தா

“காக்கி உயர் அதிகாரிக்கு எதிராக உள் குத்து வேலைகள் நடந்து வருதாமே..” எனக்கேட்டார் பீட்டர் மாமா.

“கடைகோடி மாவட்ட காக்கி உயர் அதிகாரிக்கு எதிராக சதி கும்பல் உருவாகி வருகிறதாம்.. பொதுமக்கள் மனுக்கள் மீது விரைந்து விசாரணை, விபத்து விழிப்புணர்வு, போக்சோ விழிப்புணர்வு என பல்வேறு பணி செய்தாலும், காக்கிகளுக்கும் வார விடுமுறைக்கான தனி செயலி, 3 மாதத்துக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை முகாம், காக்கிகளுக்கான குறை தீர்க்க மனம் திறந்து நிகழ்ச்சி என இறங்கினாலும், உயர் அதிகாரியின் நடவடிக்கைகள் சிலருக்கு எரிச்சலை ஏற்படுத்தி இருக்காம்.. ஆட்சி மாறியதால் எப்படியும் மாற்றி விடுவாங்க என எண்ணி இருந்த நிலையில் 100 நாள் கடந்தும் இவரை மாற்றாமல் அப்படியே விட்டு வைத்து இருக்கிறார்களாம்.. இதனால இப்போது இவருக்கு எதிராக சில சதி வேலைகளை சிலர் பின்னி வைத்துள்ளார்களாம்.. காக்கி துறையில் உள்ள சிலர் மூலமாகவே இதற்கான முயற்சிகளை கனிம கடத்தல் கும்பல் நடத்துவதாக சொல்றாங்க.. ஏற்கனவே இந்த காக்கி உயர் அதிகாரியின் தண்டனை நடவடிக்கையால் வெறுப்பில் இருப்பவர்களை ஒன்றிணைக்கும் வேலையும் நடந்து வருகிறதாம்.. காக்கி துறையின் முக்கிய அலுவலகத்துக்குள் என்னென்ன உள் குத்து வேலைகள் நடக்கிறது என்பதை மோப்பம் பிடிக்கவும் தனியாக கும்பல் களம் இறங்கி உள்ளதாக பேசிக்கிறாங்க..” என்றார் விக்கியானந்தா.

“தலைமையிடத்தில் நெருக்கம் காட்டும் மாஜி அமைச்சர்களால் நடிகர் கட்சி நிர்வாகிகள் அப்செட்டில் இருக்காங்களாமே..” என்றார் பீட்டர் மாமா.

“டெல்டா மாவட்டத்தில் நடிகர் கட்சியில் மாவட்ட பொறுப்பில் உள்ள முக்கிய நிர்வாகிகளுக்கு தேர்தலுக்கு முன்பு ராஜமரியாதை இருந்ததாம்... தேர்தல் ரிசல்ட்டுக்கு பிறகு நிலைமை தலைகீழாக இருக்கிறதாம்.. கட்சி சார்ந்த உள்ளிட்ட எந்த விஷயங்களையும் தலைமை கவனத்துக்கு கொண்டு செல்ல முடியவில்லையாம்... இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் அவர்களுக்குள் புலம்பி வருகிறார்களாம்.. முக்கியமாக, தேர்தல் ரிசல்ட்டுக்கு பின்னர் இலை கட்சியில் இருந்து நடிகர் கட்சிக்கு வந்த மாஜி அமைச்சர்கள் தலைமையிடத்தில் நெருக்கத்துடன் இருந்து வருவதோடு அவ்வப்போது ஐஸ் வைத்து வருகிறாங்களாம்.. இதனால் நடிகர் கட்சியில் அவர்களது கைதான் ஓங்கியிருக்காம்.. இதனால் நடிகர் கட்சியில் மாவட்ட பொறுப்பில் உள்ள நிர்வாகிகள் கடும் அப்செட்டில் இருக்காங்களாம்.. இந்த டாப்பிக் தான் டெல்டா மாவட்டம் முழுவதும் அரசல் புரசலாக போயிக்கிட்டு இருக்காம்..” என்றார் விக்கியானந்தா.

“மலராத தேசிய கட்சியின் மாநில தலைவர் சொந்த மாவட்ட இடைத்தேர்தலில் வாரிசை களமிறக்கும் திட்டம் வைத்துள்ளாராமே..” எனக்கேட்டார் பீட்டர் மாமா.

“மலராத தேசிய கட்சியின் மாநில தலைவர் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க திட்டமிட்டுள்ளாராம்.. கடந்த சட்டமன்றத் தேர்தலில் தொகுதி மாறி போட்டியிட்டு தோல்வி கண்ட அவர் மாநில தலைவர் பதவியை கெட்டியாக பிடித்துக் கொண்டாராம்.. தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் சூழலில் இடைத்தேர்தல் களத்தில் தனது வாரிசை இறக்க திட்டம் வைத்துள்ளாராம்.. மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்களுக்கு இலை கட்சியினர் அவரை தேடி வந்து ஆதரவு கோரியதை மனதில் கொண்டுள்ள அவர், தனது சொந்த மாவட்டத்தில் உள்ள இடைத்தேர்தல் களத்தில் தனது வாரிசை நிறுத்த நினைக்கிறாராம்.. 7 தொகுதி இடைத்தேர்தலில் ஒரு சீட்டையாவது தாமரைக்கு ஒதுக்குங்கள் என்று கேட்க தேசிய கட்சியின் தலைமையிடம் ஒப்புதலும் பெற்றுவிட்டாராம்.. ஏற்கனவே கடந்த மக்களவை தேர்தலில் அல்வா மாவட்டத்தில் எம்எல்ஏ பதவி காலியாக இருக்கும் தொகுதியில் தான் ஹெலிகாப்டரில் இறங்கி பிரதமர் பிரசாரம் செய்தார். எனவே தேசிய கட்சி இடைத்தேர்தலை தைரியமாக சந்திக்கலாம் என டெல்லி தலைமையிடம் கூறியுள்ளாராம்.. எப்படியும் இலை கட்சியில் வென்று நடிகர் கட்சியில் இணைந்தவர் தான் இடைத்தேர்தலிலும் போட்டியிடுவார் என்பதால் தேசிய கட்சி இறங்கினால் ‘டப் பைட்’ கொடுக்க முடியும். தனது வாரிசை களமிறக்கினால் ஓட்டுகள் இரண்டாக பிரியும். இதன் மூலம் நடிகருக்கும் ஷாக் கொடுக்கலாம்.. ராஜினாமா செய்தவருக்கும் பாடமாக இருக்கும் என இலை கட்சியின் மூத்த தலைவர்களிடம் விளக்கினாராம்.. தேசிய கட்சியின் ஒப்புதல், இலை கட்சியின் கணக்கு, வாரிசுக்கு பதவி என அல்வா மாவட்டத்தின் தேசிய கட்சி மாநில தலைவர் குஷியாக இருக்கிறாராம்..” என்றார் விக்கியானந்தா.

“இடைத்தேர்தலில் புல்லட்டுக்கு எதிராக விசில் கட்சி வேட்பாளரை நிறுத்த வில்லையாமே..” என்றார் பீட்டர் மாமா.

“புதுச்சேரியில் புல்லட்சாமி சொந்த தொகுதியான தட்டாஞ்சாவடி தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கு.. கடந்த முறை புல்லட்சாமியை எதிர்த்து விசில் ஆதரவுடன் களமிறங்கிய முதல் கடவுள் பெயரை கொண்டவர், இரண்டாம் இடத்தை பிடித்தார். இந்த முறையும் போட்டியிட ஆர்வத்தில் உள்ளாராம்.. தனது மைத்துனரான முதல் கடவுள் பெயரை கொண்டவரை எப்படியாவது எம்எல்ஏ ஆக்கிவிட வேண்டும் என சுயேச்சை எம்எல்ஏ நேரானவர் பல்வேறு முயற்சி எடுத்து வருகிறாராம். தமிழகத்தில் கதர் கட்சி, விசில் கூட்டணியில் இருப்பதால் இந்த முறை இரண்டு கட்சிகளில் ஏதாவது ஒரு கட்சியின் வேட்பாளராக மைத்துனர் முதல் கடவுள் பெயரை கொண்டவரை களமிறக்கலாம் என்ற திட்டத்தில் இருந்தாராம்.. இதற்கு முன்னாள் முதல்வர் நாசாவை பிடித்து டெல்லியில் மேலிட தலைவர்களை சந்தித்துவிட்டு வந்தாராம்.. தகவல் தெரிந்த கதர்கட்சி தலைவர், எனக்கு முக்கியத்துவம் தராமல், நாசாவுடன் டெல்லிக்கு செல்வதா என ஆவேசமடைந்து, எக்காரணம் கொண்டும் கட்சியில் இல்லாத ஒருவருக்கு சீட் கொடுக்க கூடாது. கட்சிக்கு உழைத்தவர்கள் இருக்கிறார்கள், அவருக்கு கொடுக்க வேண்டுமென முதல் கடவுள் பெயரை கொண்டவருக்கு கதர் கட்சியில் தடை போட்டுவிட்டாராம்.. சரி விசில் பக்கம் போகலாம் என சென்றவருக்கு அங்கு அதிர்ச்சியாம், முதலில் கதர் கட்சிக்கு தானே சென்றீர்கள், அங்கே சீட்டு வாங்கிக்கொள்ளுங்கள் என புஸ்ஸி கைவிட்டுவிட்டாராம்.. விசாரித்ததில் புல்லட்சாமிக்கு எதிராக நேரடியாக விசில் சின்னத்தில் வேட்பாளரை நிறுத்த விரும்பாத புஸ்ஸி, இப்படி சப்பையான காரணத்தை கூறி கழற்றிவிட்டதா சொல்றாங்க..” என்று முடித்தார் விக்கி. ■

வலையில் ட்ரெண்டிங்

வாட்ஸ்அப்

ஹேய் ChatGpt என் போட்டோவ 80s kids மாதிரி மாத்தி தா....😍😍

~ டேய் நீ இப்பவே அப்படித்தான்டா இருக்க இதுல நான் என்னத்த மாத்த.😕

இன்ஸ்டாகிராம்

மும்பையில் நடந்த ‘திரிஷ்யம் 3’ இந்தி பட விழாவில் ஸ்ரேயா சரண்.

சொல்லிட்டாங்க...

யார் என்ன கொச்சைப் படுத்தினாலும் வரலாற்றை மாற்ற முடியாது. அது காலத்திற்கும் அப்படியேதான் இருக்கும்.

- திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்

சென்னை பட்டினப் பாக்கத்தில் ரூ.1,200 கோடியில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது ஊழலுக்கு வழிவகுக்கும்.

- பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன்

டிவிட்டர்

ஏமாற்றம்
ஒன்றே ஏமாற்றாதது

//x.com/manipmp

பேஸ்புக்

வாழ்க்கைல நீங்க யார கூட வச்சிருக்கனும் யார தூக்கி போடனும்.. யார நம்பனும் யார நம்பக்கூடாதுனு முடிவு பண்ற காலமும்.. உங்க worth என்னன்னு உங்களுக்கே prove பண்ணிட்டு போற முதுகுத்து துரோகிகளும் தான்.. வாழ்க்கைல ஆகச்சிறந்த ஆசிரியர் ✌️

ACRE MAKING ASSETS WORK

அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்சன் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
அலுவலக எண். 101, கல்பதரு இன்பினியா, மனை பி, கிராண்ட் ஹையாட் அருகில், சாந்தாக்ரூஸ் (கிழக்கு), மும்பை – 400 055

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1)–இன் விதியுடன் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக பானுமதி S (கடன்தாரர்) மற்றும் சுந்தர் T (உப கடன்தாரர்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, ஏசிஆர்இ–80–ட்ரஸ்ட் [CIN: U65993DL2002PLC115769] ("கடனீட்டு கடனீந்தோர்")–இன் அறங்காவலராகச் செயல்படும் அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்சன் எண்டர்பிரைஸ் லிமிடெட்டுக்கு அடமானம் வைக்கப்பட்டு, அதன் நேரடி சுவாதீனமானது கடனீட்டு கடனீந்தோரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது. 16 அக்டோபர் 2026 அன்று பிற்பகல் 02:30 மணி முதல் 03.30 மணி வரை "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் என்ற அடிப்படையில் பானுமதி S (கடன்தாரர்) மற்றும் சுந்தர் T (உப கடன்தாரர்) ஆகியோரிடமிருந்து கடனீட்டு கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள அசல், பாக்கிகள் (சேர்ந்த தாமதக் கட்டணங்கள் உட்பட) மற்றும் 31.08.2026 வரையிலான வட்டி ஆகியவற்றுக்காக, 01.09.2026 தேதியின்படி எதிர்கால வட்டியுடன் கூடிய ரூ.41,16,279/– (ரூபாய் நாற்பத்தொரு லட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று எழுபத்தொன்பது மட்டும்) தொகையை அதனுடன் சட்டச் செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து வசூலிப்பதற்காக விற்பனை செய்யப்படும்.

மேற்கண்ட கடன் கணக்கு எண்.LCHESTH0000025723 –உடன் தொடர்புடைய அனைத்து உரிமைகள், தலைப்பு(கள்), பயன்(கள்), அடிப்படைக் கடனீடு(கள்), அடமானங்கள் மற்றும்/அல்லது உத்தரவாதங்கள், அசையாச் சொத்து உட்பட, நிடோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் எடெல்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது) நிறுவனத்தால், , ஏசிஆர்இ–80–ட்ரஸ்ட்டின் அறங்காவலராகச் செயல்படும் அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் எண்டர்பிரைஸ் லிமிடெட் (ACRE/ கடனீட்டு கடனீந்தோர்) நிறுவனத்திற்குச் சாதகமாக, 28.06.2024 தேதியிட்ட மற்றும் 28.06.2024 அன்று பதிவு செய்யப்பட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், கடனீட்டு கடனீந்தோர் நிதி வசதியை முறையாக தன் கீழ் கொண்டுள்ளார். எனவே, கடன் ஒப்பந்தம்(கள்) மற்றும் பிற தொடர்புடைய கடன் ஆவணம்(கள்) ஆகியவற்றின்படி தனது நிலுவைத் தொகையை வசூலிக்கவும் மற்றும்/அல்லது அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பான பாதுகாப்பு நலனை அமல்படுத்தவும் அனைத்து அதிகாரங்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அசையாச் சொத்தின் நிர்ணய விலை ரூ.17,01,200/– (ரூபாய் பதினேழு லட்சத்து ஆயிரத்து இருநூறு மட்டும்) ஆகவும், முன்பண வைப்புத்தொகை ("EMD") ரூ.1,7,120/– (ஒரு லட்சத்து எழுபதாயிரத்து நூற்று இருபது மட்டும்) ஆகவும் இருக்கும், அதாவது இது குறைந்தபட்ச விலையில் 10% –க்குச் சமமாகும்.

அசையா சொத்தின் விவரங்கள்

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம் (முன்பு தாம்பரம் வட்டம்), பழவந்தாங்கல் கிராமம், கண்ணன் காலனி, 1–ஆவது தெரு, கதவு எண். 3/5 என்ற முகவரியில் அமைந்துள்ள சொத்து. இது கிராம நத்தம் சர்வே எண். 46/1A–ல் அடங்கியுள்ளது; பட்டா எண். C.A.506/2014; பட்டாவின்படி T.S.No. 92, வார்டு எண். A, பிளாக் எண். 3 ஆகியவற்றைக் கொண்டது. இச்சொத்து 1200 சதுர அடி பரப்பளவைக் கொண்ட மனையில், 200 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பங்கு உள்ளது. பொதுப் பயன்பாட்டுப் பகுதிகள் மற்றும் கார் நிறுத்துமிடம் உள்ள இந்தச் சொத்தில் 455 சதுர அடி சிறப்பு கட்டுமானப் பரப்பளவு கொண்ட முதல் தளத்தில் உள்ள F2 எண் கொண்ட பிளாட்டையும் உள்ளடக்கியது. **இதன் எல்லைகள்: வடக்கு:** திரு. ரஹமத்துல்லா நூர்ஷா அப்துல் அலீம் என்பவருக்குச் சொந்தமான சொத்து; **தெற்கு:** திரு. கிருஷ்ணனுக்குச் சொந்தமான சொத்து; **கிழக்கு:** கண்ணன் காலனி 1–வது தெரு; **மேற்கு:** கிரீன் பீஸ் அப்பார்ட்மெண்ட்ஸ். அளவீடு: கிழக்கு–மேற்காக வடக்கு பக்கம்: 60 அடி; கிழக்கு–மேற்காக தெற்கு பக்கம்: 60 அடி; வடக்கு–தெற்காக கிழக்கு பக்கம்: 20 அடி; வடக்கு–தெற்காக மேற்கு பக்கம்: 20 அடி. இந்தச் சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் ஆலந்தூர் சார்–பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.

விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடனீட்டு கடனீந்தோரின் இணையதளமான www.acreindia.com–இல் உள்ள இணைப்பைப் பார்க்கவும்; தொடர்பு எண்கள்: 9962784954 / 9967280448.

தேதி: 09.09.2026
இடம்: மும்பை

ஒப்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்சன் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
ஏசிஆர்இ–80–ட்ரஸ்ட்டின் அறங்காவலர்

வடக்கு மத்திய இரயில்வே

டெண்டர் எண்: CEN–2026–27–DyCEC–II–1 தேதி: 09.09.2026

டெண்டர் அறிவிப்பு

இந்தியக் குடியரசுத் தலைவருக்காக மற்றும் அவர் சார்பாகவும் துணை பொறியாளர் / கட்டுமானம் –II, வடக்கு மத்திய இரயில்வே/பிரயாக்ராஜ் அவர்கள், பின்வரும் பணிகளுக்காக, பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில், 06.10.2026 அன்று 15:00 மணி வரை பின்வரும் மின்–டெண்டர்களை வரவேற்கிறார். டெண்டர்களின் விவரங்கள் பின்வருமாறு:–

டெண்டர் எண். CEN–2026–27–DyCEC–II–1, **வேலையின் பெயர்:** வடக்கு மத்திய இரயில்வே, பிரயாக்ராஜில் CAO/C & CAO/RSP ஆகியவற்றின் கீழ் உள்ள வடக்கு மத்திய இரயில்வே திட்டங்களைக் கண்காணிப்பதற்காக புராஜெக்ட் அலுவலகத்தைக் கட்டுமானம் செய்தல்.	
வேலையின் தோராயமான மதிப்பு (ரூ.): 23,92,02,371.06	**ஏலப்பாதுகாப்பு (ரூ.):** ரூ. 47,84,100.00/–
நிறைவுறும் காலம்: 18 (பதினெட்டு) மாதங்கள்,	**டெண்டர் திறக்கும் தேதி:** 06.10.2026

இதுபோன்ற பணிக்கான குறைந்தபட்ச தகுதி வரையறை: (1) சிவில் இன்ஜினியரிங் பணிக்கான கூறு (கூறு மதிப்பு = ரூ. 17,36,47,132.99) , ‘'பல மாடி கட்டிடம் கட்டுதல்–, (2) மின்சாரப் பணிக்கான கூறு (கூறு மதிப்பு= ரூ. 6,55,55,238.07)– ·HT/LT நிறுவுதல் தொடர்பான எந்தவொரு மின்சாரப் பணியையும் திருப்திகரமாக நிறைவேற்றுதல்.

குறிப்பு:– (1) அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கும் மின்–ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இலவசமாக வழங்கப்படும். **(2)** மேற்கண்ட மின்–டெண்டர்களுக்கான முழுமையான தகவல்களும் டெண்டர் ஆவணமும், டெண்டர் திறக்கப்படும் தேதியான 06.10.2026 அன்று **15:00 மணி வரை** www.ireps.gov.in என்ற இணையதளத்தில் இரு பாக்கெட் முறையில் கிடைக்கும். **(3)** மேற்கண்ட டெண்டர்களுக்கு மாற்றாக மின்–ஏலங்கள் அல்லாத பிற வடிவங்களில் உள்ள ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. இதற்காக, விற்பனையாளர்கள் **தகவல் தொழில்நுட்பச் சட்டம்–2000–**இன் கீழ் CCA–ஆல் வழங்கப்பட்ட டிஜிட்டல் கையொப்பச் சான்றிதழ்களுடன் IREPS இணையதளத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். **(4)** நிதி விகிதப் பக்கத்தில் உள்ளிடப்பட்டு, முறையாக டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட விகிதங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும். வேறு ஏதேனும் படிவம்/லெட்டர்ஹெட்டில் உள்ள விற்பனையாளரால் இணைக்கப்பட்டுள்ள விகிதங்கள் மற்றும் வேறு ஏதேனும் நிதி உள்ளீடுகள் உடனடியாகப் புறக்கணிக்கப்படும் மற்றும் பரிசீலிக்கப்படாது. **(5)** டெண்டர்தாரர்கள், டெண்டர் ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழை நிலையான மாதிரி வடிவத்தில் அனைத்து வகைகளுக்கும் பின்–இணைப்பாகச் சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில் அவர்களின் டெண்டர் பரிசீலிக்கப்படாது மற்றும் உடனடியாக நிராகரிக்கப்படும். **(6)** பொருட்கள் மற்றும் பணிகளை வழங்குநர்/ ஒப்பந்ததாரர் அவ்வப்போது வெளியிடப்படும் ஜிஎஸ்டி சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்படுவர். **(7)** இணைக்கப்படும் ஆவணங்கள் டெண்டர்தாரரால் அதன் உள்ளடக்கத்தில் கையொப்பமிடப்பட வேண்டும் **(8)** மின்–ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான முன் வைப்புத் தொகையை (EMD) இணைய வங்கிமுறை மூலமாக அல்லது பேமென்ட் கேட்வே மூலமாகவோ செலுத்த வேண்டும். **(9)** ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், IREPS–இன் இணையதளத்தில் உள்ள உதவி மையத்தை அணுகலாம். **(10)** டெண்டர் திறக்கப்படும் நாளான 06.10.2026 அன்று 15:00 மணி வரை ஆன்லைனில் டெண்டரை சமர்ப்பிக்க இயலும். **(11)** டெண்டர்தாரர் GCC–2022 இன் பிரிவு 10 முதல் 18 (பகுதி–I) இன் படி தேவையான ஆவணங்களை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில் சலுகை முழுமையற்ற சலுகையாகக் கருதப்படும், அதன்படி பரிசீலிக்கப்படாது. **2068/26 (MG)**

North central railways @CPRONCR www.ncr.indianrailways.gov.in

தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்கான

டெண்டரை எதிர்த்த வழக்கு தள்ளுபடி

சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, செப். 11: அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் அளிக்கும் தாய்மாமன் தங்க மோதிர திட்டத்துக்கான டெண்டரை ஜாய் ஆலுக்காஸ் நிறுவனத்துக்கு வழங்கியதை எதிர்த்த வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராமில் (22 கேரட்) தங்க மோதிரம் அளிக்கும் திட்டத்துக்கான டெண்டர் ஜாய் ஆலுக்காஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 41 ஆயிரத்து 667 தங்க மோதிரங்களை கொள்முதல் செய்வதற்கான டெண்டரை தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் கோரியுள்ளது.

ஒரு பைசாவில் தங்க மோதிரம் சப்ளை செய்ய முன்வந்த ஜாய் ஆலுக்காஸ் நிறுவனத்துக்கு வழங்கிய டெண்டரை ரத்து செய்ய வேண்டும் என்று சென்னையைச் சேர்ந்த பொற்கொல்லர் ராஜ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், தங்க மோதிரத்தை செய்து மாநிலம் முழுவதும் உள்ள 107 மையங்களுக்கு ஹால் மார்க் முத்திரையுடன் அனுப்ப வேண்டும் என்று டெண்டர் விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹால்மார்க் முத்திரை பெறுவதற்கு ஒரு நகைக்கு 45 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டியுள்ள சூழலில் 4 லட்சத்து 41 ஆயிரத்து 667 தங்க மோதிரங்களை 4 ஆயிரத்து 465 ரூபாய்க்கு சப்ளை செய்வதாக ஜாய் ஆலுக்காஸ் நிறுவனம் கூறியிருப்பது வணிக ரீதியாக சாத்தியமற்றது. இதை, அனுமதித்தால் அந்த நகைகள் தரமானதாக இருக்காது. மேலும், மருத்துவ சேவைக் கழகம் மருந்துப் பொருட்கள் கொள்முதல் செய்வதில்தான் நிபுணத்துவம் பெற்றது. அந்த கழகத்துக்கு தங்கத்தைப் பற்றி என்ன தெரியும் என்று வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், மனுதாரர் திட்டத்தை எதிர்த்தும், டெண்டரை எதிர்த்தும்தான் வழக்குத்தொடர முடியுமே தவிர டெண்டர் வழங்கியதை எதிர்த்து வழக்கு தொடர முடியாது. இதன்மூலம், அரசுக்குதான் லாபம் வரும்.

ஒருவேளை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் ஏராளமான தங்கம் உள்ளதால் இந்த தொகையை அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடும். நகை தரமாக இல்லாவிட்டால், டெண்டரை அதிகாரிகள் ரத்து செய்வார்கள். எனவே, இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். இந்த வழக்கில் விரிவான உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

வடக்கு மத்திய இரயில்வே

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.: 230–Elect/TRD/PRYJ/E–Tender Notice/2026/656 தேதி: 09.09.2026

மின்-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்க்குறிப்பிட்ட பணிக்காக, இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பாக, வடக்கு மத்திய இரயில்வே பிரயாக்ராஜ் முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர்/TRD அவர்களால் மின்–ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் கீழே உள்ளவாறு:

டெண்டர் எண்.: 230–TRD–WC–1045–2026	
பணியின் விவரம்: பிரயாக்ராஜ் பிரிவில் காம்போசிட் இன்சுலேட்டர்களை (CD1050mm) பீங்கான் இன்சுலேட்டர்களால் மாற்றுதல்.	
விளம்பரப்படுத்தப்பட்ட மதிப்பு: ரூ. 8,35,04.736.28	**ஏலப்பாதுகாப்பு:** ரூ. 16,70,100.00
நிறைவு பெறும் காலம்: 18 மாதங்கள்	**ஏலமுறை:** ஒற்றைப் பாக்கெட்
டெண்டர் சமர்ப்பிப்பதற்கான இறுதி தேதி மற்றும் நேரம்: 01.10.2026 & 14:00 மணி.	
டெண்டர் திறக்கும் தேதி மற்றும் நேரம்: 01.10.2026 & 15:00 மணி.	

குறிப்பு:– (1) மேற்கண்ட மின்–டெண்டர்களுக்கான முழுமையான தகவல்களும் டெண்டர் ஆவணமும், டெண்டர் திறக்கப்படும் தேதிக்கு 21 நாட்களுக்கு முன்னர் **www.ireps.gov.in** என்ற இணையதளத்தில் கிடைக்கும். **(2)** மேற்கண்ட டெண்டர்களோடு தொடர்புடைய மின்–ஏலங்கள் அல்லாத பிற வடிவங்களில் உள்ள ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. இதற்காக, விற்பனையாளர்கள் டிஜிட்டல் கையொப்பச் சான்றிதழுடன் IREPS இணையதளத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். **(3)** ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், IREPS இணையதளத்தில் உள்ள உதவி மையத்தை அணுகலாம். **2072/26 (D)**

North central railways www.ncr.indianrailways.gov.in @CPRONCR

உயிருக்கு ஆபத்து என புகார் கொடுத்த மறுநாளே இளைஞர் வெட்டிக் கொலை

இதுதான் தமிழக அரசு சட்டம், ஒழுங்கை பாதுகாக்கும் அழகா?

அன்புமணி கண்டனம்

சென்னை, செப்.11: பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்த பிரதீப் ராஜ் என்ற துறைமுக ஒப்பந்த பணியாளர் அவரது வீட்டிற்கு அருகிலேயே கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். கடன் கொடுத்தவர்கள் தரப்பிலிருந்து தமக்கு தொடர்ந்து கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுவதாக காவல் துறையில் பிரதீப் ராஜ் புகார் செய்திருக்கிறார். சில வாரங்களுக்கு முன் இது தொடர்பாக திருவொற்றியூர் காவல் நிலையத்திலும், துணை ஆணையரிடமும் அவர் புகார் அளித்த நிலையில், அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத காவல்துறையினர், பிரதீப் ராஜையே பொய் வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்நாள் திருவொற்றியூர் காவல் நிலையத்தில் தமது உயிருக்கு அச்சுறுத்தல் விடப்படுவது குறித்து பிரதீப் ராஜ் மீண்டும் புகார் செய்துள்ளார். அப்போதும் அதன் மீது நடவடிக்கை எடுக்காத காவல் ஆய்வாளர், தமக்கு கொலை மிரட்டல் விடுப்பதாக ஊடகங்களிடம் பிரதீப் ராஜ் குற்றஞ்சாட்டியிருந்தார். அதற்கு அடுத்த நாளே பிரதீப் ராஜ் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளார். உயிருக்கு பாதுகாப்பு கேட்பவர்களுக்கு ஆதரவாக இல்லாமல், கொலை மிரட்டல் விடுப்பவர்களுக்கு ஆதரவாக செயல்படுவது தான் காவல்துறையின் கொள்கையா? இந்த விஷயத்தில் கடமையை செய்யத் தவறிய ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னையில் கடந்த சில நாள்களுக்கு முன் ஆளும் தவெக நிர்வாகி உள்ளிட்ட இருவர் ஒரே நாளில் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். அந்த பதற்றம் தணியும் முன்பே அடுத்தக் கொலை நிகழ்ந்துள்ளது. இதனால் அச்சமடைந்துள்ள மக்கள், இது தான் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்கும் அழகா என வினா எழுப்புகின்றனர். சென்னையில் இனியும் இத்தகைய கொலைகள் நடக்காத வகையில் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க அரசும், காவல்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பிற்சேர்க்கை IV–ஏ

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

ஜாமீன் பெறுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுகட்டமைப்புச் செய்தல் மற்றும் ஜாமீன் நலன் அமலாக்கச் சட்டம், 2002-ன் கீழாக அசையாச் சொத்துக்களை ஈ-ஏல விற்பனைஅறிவிப்பு மற்றும் ஜாமீன் நலன் (அமலாக்க) விதிமுறைகள், 2002-ன் விதி 8(6) அதன் விதிமுறைகளுடன் சேர்த்துப் படிக்கவும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட/ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்தை (ஜாமீன் பெற்ற கடன் நிறுவனம்) **சம்மான் ஃபின்சர்வ் லிமிடெட் (முன்னர் இந்தியாபுல்ஸ் கமர்சியல் கிரெடிட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)-ன் [CIN : U65923DL2006PLC150632] (''செக்யூர்ட் கிரெடிட்டர்'')** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, **ஆக்கபூர்வமா கையகப்படுத்தியுள்ளார்** என்பது இதன் மூலமாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன் பெற்றவருக்கும்(கள்) ஜாமீன்தாரருக்கும்(கள்) இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது **பி. ராஜேஸ்வரி (உரிமையாளர், தி கிராண்ட் ஸ்வீட்ஸ் அண்ட் ஸ்நாக்ஸ்), பி. ஆர். பிரியங்கா என்ற பிரியங்கா மதன் மற்றும் ஞானசேகரன் மதன் என்ற மதன் ஞானசேகரன்** ஆகியோர் ஜாமீன் பெற்றகடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய **01.09.2026**-லிருந்து கடன் ஒப்பந்தம் விதிமுறைகளின்படி, சட்ட செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் **31.08.2026** தேதிவரை **கடன்கணக்கு எண். HLLAVLC00402002** -ன் மீதாக **ரூ. 4,31,39,480/- (ரூபாய் நான்கு கோடியே முப்பத்து ஒரு லட்சத்து முப்பத்து ஒன்பது ஆயிரத்து நானூற்று எண்பது மட்டும்)** மற்றும் **கடன்கணக்கு எண். HLLACHE00498881** -ன் மீதாக **ரூ. 20,89,720/- (ரூபாய் இருபது லட்சத்து எண்பத்து ஒன்பது ஆயிரத்து எழுநூற்று இருபது மட்டும்)** என மொத்தம் **ரூ. 4,52,29,200/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து இரண்டு லட்சத்து இருபத்து ஒன்பது ஆயிரத்து இருநூறு மட்டும்)** நிலுவை அசல், பாக்கிகள் (தாமதகட்டணம் உட்பட) மற்றும் வட்டியை வசூலிப்பதற்காக **14.10.2026**-ம் தேதி **மாலை 05.00 முதல் மாலை 06.00** வரை **''எங்கிருக்கிறதோ அங்கு'', ''உள்ளது உள்ளபடி'' மற்றும் ''எதுவாக இருந்தாலும்''** விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்துக்கான ஏல மதிப்பு **ரூ. 7,07,00,000/- (ரூபாய் ஏழு கோடியே ஏழு லட்சம் மட்டும்)** ஆக இருக்கும் மற்றும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (''ஈஎம்டி'') ஏல மதிப்பில் 10%-க்குச் சமமான அதாவது **ரூ. 70,70,000/- (ரூபாய் எழுபது லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)** ஆகும்.

அசையா சொத்தின் விவரம்:

ஆற்காடு சாலையில், கதவு எண் 97 கொண்டுள்ள (மேற்குப் பகுதி), பட்டா புதிய சர்வே எண் 157/2-ன் படி சர்வே எண் 157-ல் அடங்கியுள்ள, நிலம் மற்றும் சொத்துக்கள் அனைத்தும், சதுர அடி (10,313 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தில்) 5343 சதுர அடி பரப்பளவு கொண்டது, போரூர் கிராமத்தில், சைதாப்பேட்டை வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் (தற்போது திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம்), சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் துணைப் பதிவு மாவட்டம் ஆகியவற்றின் எல்லைக்குள், சென்னை–600116, தமிழ்நாடு மற்றும் பின் வரும் எல்லைகளைக் கொண்டது:

வடக்கு : ஆற்காடு சாலை;
தெற்கு : ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடு மற்றும் காலி நிலம்;
கிழக்கு : திருமதி ஜி. பிரவீணாவுக்கு சொந்தமான மீதமுள்ள நிலம்;
மேற்கு : காலி நிலம்;
5343 சதுர அடி அல்லது அங்கு உண்மையில் உள்ள அளவு.

அளவுகள் :
கிழக்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக : 69 அடி
மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக : 68 அடி
வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக : 68 அடி
தெற்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக : 86 அடி
சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்தின் இணையதளம், அதாவது கொடுக்கப்பட்டுள்ள www.sammaanfinserve.com என்ற இணைப்பில் பார்க்கவும். தொடர்பு எண் : 0124-6910910, +91 7065451024; மின்னஞ்சல் முகவரி: auctionhelpline@sammaancapital.com. ஏலத்திற்கு, வருகை தரவும் www.auctionfocus.in.

எஸ்டி/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சம்மான் ஃபின்சர்வ் லிமிடெட்
(முன்னர் இந்தியாபுல்ஸ் கமர்சியல் கிரெடிட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

தேதி : 02.09.2026
இடம் : சென்னை